## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 37. ஸ்ரீமதி.கோமா பாய் அம்மையார்

---

பண்டரீபுரத்தில் வாழ்ந்த விதவைப் பெண் இவர்.
ஏழைப் பெண் இவர்.
அனாதைப் பெண் இவர்.

தன் முன் வினைப் பலனை ஏற்றுக் கொண்டவர் ஆன்மீக எழுச்சிக்குள் நுழைந்து முக்திக்கு வழி தேடி இன்றும் பல பெண்களுக்கு உதாரணமாக இருக்கிறார்.

புலன் அடக்கம், போக வாழ்க்கை வேண்டி மீண்டும் ஒரு வாழ்க்கையைத் தேடாத பக்குவம், அத்வைத்த சித்தி என இவர் மூலம் நாம் பெற வேண்டிய பாடங்கள் பல.

இவரது வரலாற்றைப் படிக்கும் போது, நமக்கு இறைவன் அளித்துள்ள அழகிய வாழ்வை எண்ணி எண்ணி மகிழ்ந்து, ஆன்மீகப் பணி செய்க, சமூஹப் பணியை இறை பெயரால் செய்க!

பண்டரீபுரம் விட்டு மறுகரையில் இருக்கும் வீடுகளில் வேலை செய்தும் இவர் பிழைத்து வருகிறார்.பலர் இவருக்கு வாழ்க்கை அளிக்க வந்தும் , தகாத உறவில் ஈடுபடுத்தி போகத்தைக் காட்ட வந்தும் இவர் அதற்கு இணங்காமல் சதா பண்டரீ ஈசனையே துணையாகக் கொண்டு பாவ பக்தியும் அன்பர் சேவையும் செய்தார்.

கிடைப்பதை உண்பார், பழையதையும் தூய்மையாய் உடுத்திக் கொண்டு பெண்மையைக் காப்பார், தன் தெய்வம் இருக்கும் போது வேறு யாரும் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்ற ஸ்திடகாத்ர பக்தியில் தனக்குக் காவல் செய்தார்.புலன் இச்சைகளை ஈஸ்வர த்யானம் மூலம் அடக்கி ஆண்டார்.

வேலை நேரம் போகக் கோயிலையே வலம் வருவதும், பஜனைகளில் ஈடுபடுவதும், அன்பர்களுக்கு உதவுவதும், பாண்டுரங்க தரிசனமும் கொண்டு வாழ்க்கையைக் கடத்தினார்.

**கூலி வேண்டாத படகோட்டி**
ஆடி மாத ஏகாதசிக்கு முந்தைய தினம்.மறுகரைக்கு வேலைக்குச் சென்ற கோமா பாய்க்கு பீமா ஆற்றைத் தாண்ட முடியாத வெள்ளம். கையில் காசே இல்லை. ஏகாதசி அன்று அன்பர்களுக்குத் தர வீடுகளில் சோள மாவு கேட்டு வாங்கினார்.

சதா நாம ஸ்மரணத்துடன் ஒவ்வொரு படகோட்டியையும் கெஞ்சுகிறார்."ஐயா கூலியாக இதோ தரமான சோள மாவு பெறுக!"

காசே குறிக்கோள் என வாழும் கலியில் சோள மாவு எம்மாத்ரம்?

அப்போது ஒரு இளைஞன் படகில் வந்து, "**அம்மா! என் படகில் ஏறுக, ஆஷாட ஏகாதசிக்குச் செல்லும் உன் போன்ற ஏழைகளுக்கு உதவினால் எமக்கல்லோ புண்ணியம்? சம்சாரக் கடலைக் கடக்கத் துடிக்கும் உன்னை பீமா ஆற்றைக் கடக்கச் செய்கிறேன்!**" என்று கூறி ஆற்றைக் கடந்து விட்டு விடுகிறான்.அவனே தன் ஈஸ்வரன் என்று உணர்ந்து, ஓடக்காரனின் ஆத்மாவினை பூஜித்து ஊருக்கும் போனாள் கோமா பாய்.

பீமா ஆற்றில் குளித்தாள், பக்த கோடிகளின் பஜனைகளில் ஈடுபட்டாள், பாண்டுரங்கனை தரிசிக்கிறாள்.மறுநாள் துவாதசி.அன்று அன்பர்களுக்கு அன்னம் தரும் தினம்.

தன் சோள மாவைக் கையில் வைத்துக் கொண்டு, "ஐயா! அம்மா! அடியாளின் தானத்தை ஏற்றுக் கொள்க!" என்று கெஞ்சினாள்.யாரும் இவளைக் கண்டு கொள்ளவில்லை.

**பிச்சைக்காரப் பாண்டுரங்கன் ருக்மிணி**

அப்போது ஒரு வயதான பிச்சைக்காரர் இவளிடம் உணவு கேட்க, இவள் அவரது ஆன்ம தரிசனத்தையே ஈஸ்வர தத்வமாக உணர்ந்து அவருக்கு மாவைக் கொடுக்க, "அம்மாக இதைச் சமைத்துத் தருக!" என்று வேண்ட, தீ மூட்டி, கல்லின் மீது ரொட்டி சுட்டுத் தர அவர் எங்கோ அலைந்து கொண்டு இருந்த தன் வயதான மனைவியையும் கூட்டி வந்து ரொட்டிகளை உண்டு ஆசீர்வதிக்கிறார்.

**அதற்கு எவ்விதப் பலனையும் எதிர் பாராத கோமா பாய், ஏழையான தன் எளிய பக்திக்கு சேவை செய்யும் வாய்ப்பை அளித்த அவர்களுக்கு அனேக நமஸ்காரம் செய்தாள்.அவர்களே மெய்யுணர்வில் ப்ரஹ்ம தத்வமான ஈஸ்வரன் என்பதை அவள் அடையாளம் கண்டு கொண்டு, பல காலம் அவர்களுக்கு அன்னம் இட்டும், வேறு உதவிகள் செய்தும் இறைவனடி சேர்ந்தாள்.நம்மிடம் இருக்கும் எல்லோரும் ப்ரஹ்மம் தான்.அவரவருக்குச் செய்யும் தூய அன்புடன் கூடிய அனைத்து உதவிகளும் சேவையே!**

ஹரி ஓம்!